# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணை மதிப்பீட்டுப் பரீட்சை - 2022

| தரம் - 10 | வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் | நேரம் :- 3.00 மணித்தியாலம் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..............................................................................

### பகுதி I

யாழ்ப்பாணத்தில் வசிக்கும் சாரங்கன் என்பவர் பழங்களை பயிரிட்டு பழப்பானங்களை உற்பத்தி செய்கின்றார். அவர் பழப்பானங்களை விற்பனை செய்யும் வணிகத்தினை புதிய பஸ்தரிப்பிடத்திற்கு அருகில் நடாத்தி வருகின்றார். வரட்சிக்காலங்களில் அவருடைய விற்பனையை அதிகரித்து அதிக இலாபத்தினை உழைக்க முடியுமாகையில். இவ்வணிகத்தினை கூட்டிணைக்கப்பட்ட கம்பனியாக மாற்றுவதற்கு ஏதிர்பார்க்கின்றார் முண்ணணி குத்தகைக் கம்பனியொன்று குறைந்த வட்டியில் புதிய இயந்திரமொன்றியை வழங்க முன்வருகின்றது

01. இவருடைய வணிகத்தின் மூலம் திருப்தி செய்யப்படும் தேவை மற்றும் விருப்பத்தினை ஒழுங்கு முறையே தருக.

1. .பழப்பானம் - உணவு
2. உணவு - சுகாதாரம்
3. .உணவு - பழப்பானம்
4. .உணவு - பஸ்பயணம்

02. சாரங்கன் வணிகத்திற்கு வாய்ப்பொன்றாக கருதப்படுவது.

1. சொந்த பழப்பண்ணையை கொண்டிருத்தல்
2. கூட்டிணைக்கப்பட்ட கம்பனியாக மாற்ற எதிர்பார்த்தல்
3. .பஸ்நிலையத்திற்கு அருகில் அமைந்திருத்தல்
4. .பழப்பாணத்தயாரிப்பில் காணப்படும் அனுபவம்

03. குறைந்த வட்டியில் கடன் வழங்குதல் உள்ளடக்கப்படுவது

1. .பொருளியல் சூழல்
2. தொழிநுட்பச்சூழல்
3. சட்டச் சூழல்
4. பூகோளச்சூழல்

04. சாரங்கனின் வணிகம் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியாக பதிவு செய்யப்படின் எச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படவேண்டும்

1. 1954ஆம் ஆண்டு 14ஆம் இலக்க கடைகாரியாலய ஊழியர் சட்டம்
2. 1918ஆம் ஆண்டு 6ஆம் இலக்க வணிகப் பெயர்பதிவுக் கட்டளைச் சட்டம்
3. 2007ஆம் ஆண்டு 7ம் இலக்க கம்பனிச்சட்டம்
4. 2003ஆம் ஆண்டு 9ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச்சட்டம்

05. சாரங்கன் வணிகம் தொடர்பில் சரியான கூற்றினை தெரிவு செய்க

1. பொருள்உற்பத்தி வணிகமொன்றாகும்
2. சேவை உற்பத்தி வணிகமொன்றாகும்
3. பொதுத்துறை வணிக அமைப்பொன்றாகும்
4. இலாபநோக்கற்ற வணிக அமைப்பொன்றாகும்



Education கல்வி අධ්‍යාපන
kalvi.lk

06. வணிகமொன்றின் நோக்கங்களை அடைவதற்கான தீர்மானங்களை மேற்கொள்வார் . (1) ....................................... ஆக கருதப்படும் அதேவேளை தரமான பொருட்களை நியாயமான விலையில் பெற்றுக் கொள்பவர் (2) ...............................ஆக கருதப்படுவார் மேற்தரப்பட்ட கூற்றில் (01)மற்றும்(02)ஆகிய இடைவெளிகளில் இடம்பெறக்கூடிய சரியான சொற்களை ஒழுங்குமுறையில் எடுத்துக்காட்டும் விடையினைத் தெரிவு செய்க

1. போட்டியும்,ஊழியர்கள்
2. வாடிக்கையாளர்கள், முகாமையாளர்
3. உரிமையாளர்,வாடிக்கையாளர்
4. முகாமையாளர்,வாடிக்கையாளர்

07. பொருளொன்றின் பண்பொன்றாக கருதப்படுவது

1. தொட்டுணர முடியாத தன்மை
2. ஒத்தன்மை வாய்ந்தவை
3. வழங்குனரிடமிருந்து பிரிபடமுடியாத தன்மை
4. களஞ்சியப்படுத்த முடியாத தன்மை

08. கூட்டுறவுச்சங்கமொன்றினை ஆரம்பிப்பதற்கு இருக்க வேண்டிய ஆகக்குறைந்த அங்கத்தவர் எண்ணிக்கை

1. .20பேர்
2. 2பேர்
3. 15பேர்
4. 10பேர்

09. பொதுமக்களுக்கு பங்குகளை வழங்குவதன் மூலம் மூலதனத்தினை திரட்டக் கூடிய வணிக அமைப்பு எது ?

1. பங்குடமை
2. தனியார்உடமை
3. கூட்டிணைக்கப்பட்ட கம்பனி
4. சங்க வகை அமைப்பு

10. சனத்தொகை புள்ளி விபரவியல் திணைக்களத்தின் கூற்றின்படி 25க்கு குறைவான ஊழியர்களைக் கொண்ட வணிகம் எவ்வாறு அழைக்கப்படும்

1. பங்குடமை
2. சிறியளவான வணிகம்
3. அரச கம்பனி
4. பேரளவுவணிகம்

11. பங்குடமையில் ஆகக்கூடிய பங்காளர் எண்ணிக்கையினை வரையறுக்கும் சட்டம்

1. 1890 ஆம் ஆண்டு பங்குடமை கட்டளைச்சட்டம்
2. 1918ம்ஆண்டு 6ம் இலக்க வணிகப் பெயர் பதிவு கட்டளைச் சட்டம்
3. 1840 ஆம் ஆண்டு மோசடி தவிர்ப்பு கட்டளைச்சட்டம்
4. 2007 ஆம் ஆண்டு 7ம் இலக்ககம்பனிச் சட்டம்

12. பொதுத்துறையின் கீழ் இலாபநோக்குடன் செயற்படும் வணிக அமைப்பாக கருதப்படுவது

1. கூட்டிணைக்கப்பட்ட கம்பனி
2. கூட்டுறவுச்சங்கம்
3. அரச கூட்டுத்தாபனம்
4. அரச கம்பனி

13. தனியுடமை மற்றும் பங்குடமையில் காணப்படாத கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றில் காணப்படும் ஒரு பண்பாக கருதப்படுவது

1. பொருளாதார நடவடிக்கைகயொன்றில் ஈடுபடல்
2. வரையரையற்ற நட்டப்பொறுப்பு
3. சட்ட ஆளுமையினை கொண்டிருத்தல்
4. தொடர்ந்தியங்கும் தன்மையற்றது

Education கல்வி அධ්‍යාපන



kalvi.lk

14. தேசிய கால்நடை அபிவிருத்தி சபை எந்த வகையான வணிக அமைப்பினை சார்ந்தது

1. அரச திணைக்களம்
2. அரச கூட்டுத்தாபனம்
3. அரசகம்பனி
4. சங்கவகைஅமைப்பு

15. வணிகமொன்றின் (1) ...................................... முதலீட்டின் பாதுகாப்பு தொடர்பில் அக்கறையுடையவர்களாக காணப்படுகின்ற அதேவேளை (2) ................................... நியாயமான சம்பளத்தை பெற்றுக்கொள்வதில் அக்கறையுடயவர்களாக காணப்படுகின்றனர்.

மேலே தரப்பட்ட கூற்றில் (01) மற்றும் (02) ஆகிய இடைவெளிகளில் இடம்பெறக்கூடிய சரியான சொற்களை ஒழுங்குமுறையில் எடுத்துக்காட்டும் விடையைத்தெரிவு செய்க

1. போட்டியாளர்கள் ,ஊழியர்கள்
2. உடமையாளரகள் ,வழங்குனரகள்
3. ஊழியர்கள் உடமையாளர்கள்
4. உடமையாளர்கள், ஊழியர்கள்

16. பாராளுமன்றத்தின் பொதுவான அல்லது விசேட சட்டமூலத்தின் கீழ் உருவாக்கப்படும் வணிக அமைப்பு எது ?

1. அரச கூட்டுத்தாபனம்
2. அரசகம்பனி
3. திணைக்களம்
4. கூட்டுறவுச் சங்கம்

17. கண்ணியத்தொழிலில் (வாண்மைத் தொழில்) அதிகளவு பயன்படுத்தப்படும் வணிக அமைப்பு

1. தனியாள் உடைமை
2. பங்குடமை
3. கூட்டுறவுச்சங்கம்
4. கூட்டிணைக்கப்பட்ட கம்பனி

18. கணக்கீட்டின் பிரதான நோக்கம்

1. சட்டத்தேவைப்பாடுகளை பூர்த்தி செய்தல்
2. வணிகத்தின் இலாபத்தினை கணிப்பிடல்
3. வணிகத்தின் அக்கறையுடன் தரப்பினருக்கு தேவையான தகவல்களை வழங்குதல்
4. வணிகத்தின் நிதிநிலமையினை மதிப்பிடல்

பின்வரும் தகவல்களை அடிப்படையாக கொண்டு 19,20 வினாக்களுக்கு விடை தருக

A. கடன்பட்டோர்
B கடன் கொடுத்தோர்
C. விற்பனை
D மூலதனம்
E. தளபாடம்
F. வங்கிகடன்
G. முதலீடு
H. கட்டடம்
I. காசுமீதி
J. வங்கி மேலதிகப்பற்று

19. சொத்துக்களை மட்டும் உள்ளடக்கிய விடைத்தொகுதி

1. ABCD
2. DEFI
3. AEHI
4. CDEF

20. பொறுப்புகளை மட்டும் உள்ளடக்கிய விடைத்தொகுதி

1. BCD
2. CEF
3. BHI
4. BFJ



kalvi.lk

## பகுதி II

**முதலாம் வினா உட்பட நான்கு வினாக்களுக்கு விடை தருக.**

*ரவி மற்றும் ராஜ் ஆகிய இருவரும் சமமான மூலதனத்தினை ஈடுபடுத்தி போத்தலில் அடைக்கப்பட்ட பழப்பானங்களை உற்பத்தி செய்து விற்பனை செய்யும் வணிகமொன்றினை 'நட்சத்திர குடிபானம்' எனும் பெயரில் சந்தைக்கு அருகில் வாடகைக் கட்டிடமொன்றில் ஆரம்பித்தனர். அவர்கள் குடிபானங்களை தயாரிப்பதற்காக கரனின் பழத்தோட்டத்திலிருந்து பழங்களை கொள்வனவு செய்தனர். வணிகத்தினை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 500000 த்தினை மக்கள்வங்கியிடம் இருந்து கடனாக பெற்றனர்.*

*01. இவ்வணிகத்தின் மூலம் திருப்தி செய்யப்படும் மனித தேவை யாது?*
*02. இவ் வணிகம் உரிமை அடிப்படையில் எவ்வணிக அமைப்பினை சார்ந்தது?*
*03. இவ் வணிகத்தின் பலமொன்றையும்,வாய்பொன்றினையும் குறிப்பிடுக?*
*04. குடிபானங்களை தயாரிப்பதற்காக இவ்வணிகத்தினால் பயன்படுத்தப்படும் பழங்கள் எவ்வகையாக உற்பத்தி காரணியை சார்ந்தது.*
*05. இவ்வணிகத்தில் அக்கறையுடன் செயற்படும் நான்கு தரப்பினரை குறிப்பிடுக.*
*06. கரனிடமிருந்து இவ்வணிகத்தினால் எதிர்பார்க்கப்படும் பங்களிப்புகள் 2 தருக?*
*07. நட்சத்திர குடிபானம் எனும் வணிகத்தினை பதிவு செய்ய வேண்டுமென ரவி கூறுகிறார் இக்கூற்றுடன் இணங்குகின்றீரா?உமது விடைக்கான காரணத்தினை தருக?*
*08. இவ் வணிகத்தினை பதிவு செய்ய வேண்டுமெனில் எச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யவேண்டும்.*
*09. வணிகமொன்றின் பெயரினை பதிவு செய்வதனால் ஏற்படும் இரண்டு அனுகூலங்களை குறிப்பிடுக?*
*10. அரசாங்கத்திடமிருந்து இவ்வணிகம் எதிர்பார்க்கும் பங்களிப்புகள் 2 தருக?*

***வினா - 02***

*(01)*

a .*மனித தேவை என்றால் என்ன?*

b .*தேவையொன்றின் பண்புகள் இரண்டு தருக?*

*(02) உற்பத்தியின் தன்மை அடிப்படையில் வணிகங்களை வகைபடுத்துக*

*(03) சுதன் என்பவர் பதனிடப்பட்ட தோலைப்பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட சப்பாத்துக்களை விற்பனை செய்யும் வணிகமொன்றினை நடாத்தி வருகின்றார்.*

a. *சுதனுடைய வணிகத்தினால் திருப்தி செய்யப்படும் தேவை யாது?*



Education கல்வி அධ්‍යාපන

kalvi.lk

b. சப்பாத்து உற்பத்தியின் பயன்படுத்தப்படும் பதனிடப்பட்ட தோல் மூலதனம் எனும் உற்பத்தி காரணியாகும். இக்கூற்றுடன் இணங்குகின்றீரா உமது விடைக்கான காரணத்தினை தருக?

*(04)* வணிகமொன்றின் பொதுவான நோக்கங்கள் *2* தருக?

*(05)* பொருள் உற்பத்திவணிகம், சேவைஉற்பத்தி வணிகம் ஆகியவற்றிற்கு முறையே இரண்டு உதாரணங்கள் வீதம் தருக?

**வினா *(03)***

*(01)* a. வணிகச் சூழலில் இரு வகைகளும் எவை?

b. வணிகத்தின் தாக்கத்தினை ஏற்படுத்தும் பொருளியல் சூழல் காரணிகள் *4* தருக?

*(02)* பூகோளச்சூழலினால் உள்நாட்டு வணிகத்தில் ஏற்படும் சாதகமான மற்றும் பாதகமான விளைவுகள் தலா இரண்டினைக் குறிப்பிடுக?

*(03)* வணிகமொன்றில் காணப்படும் பலவீனம் மற்றும் அச்சுறுத்தல்கள் தலா இரண்டு வீதம் குறிப்பிடுக.

*(04)* பால் பண்ணை ஒன்றினை நடாத்திவரும் அமரபால என்பவர் இயற்கை உரத்தினை தயாரிப்பதற்கான செயற்திட்டமொன்றினை முன்மொழிந்தார் இச்சந்தர்ப்பத்தில் இரசாயண உரப்பாவனையினை குறைப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது. அமரபால முன்மொழிந்த செயற்திட்ட வணிகத்தின் பலமொன்றையும், வாய்பொன்றையும் குறிப்பிடுக.

*(05)* வணிகமொன்றின் புறச்சூழல் காரணிகள் நான்கு தருக ?

Education කල්වි අධ්‍යාපන

**வினா *(04)***

*(01)* வணிக அமைப்புகளை வகைப்படுத்துவதற்கான மூன்று நியதிகளையும் குறிப்பிடுக?

*(02)* கூட்டுறவுச்சங்கமொன்றில் விசேட சிறப்பியல்புகள் நான்கினையும் குறிப்பிடுக

*(03)* *01.* அரச கூட்டுத்தாபனங்களுக்கு இரண்டு உதாரணங்கள் தருக?

*02.* பங்குடமை ஒப்பந்தமொன்றினை மேற்கொள்ளக்கூடிய வழிமுறைகள் மூன்றினையும் தருக?

*(04)* பின்வருவன இலங்கையில் காணப்படும் சில வணிகங்களின் பெயர்களாகும்.

சிவன்களஞ்சியம்,
வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்
சிறிலாங்கா ரெலிக்கொம் பொதுவரையறுத்த கம்பனி
இலங்கை தபால் திணைக்களம்



kalvi.lk

a. மேலுள்ள ஒவ்வொருவணிகமும் எவ்வகையான வணிக அமைப்பினை சார்ந்தவை எனகுறிப்பிடுக

b. மேலுள்ள வணிக அமைப்புக்களும் சட்ட சட்ட ஆளுமையுடைய வணிக அமைப்பும் எது?

*(05)* வணிக அமைப்புக்களை பருமன் அடிப்படையில் வகைப்படுத்துவதற்கான அடிப்படைகள் நான்கும் எவை?

***வினா 05***

*(01)* a. சொத்தொன்றின் பண்புகள் *2* தருக?

b. உரிமை என்பதால் கருதப்படுவது யாது?

*(02)* a. கணக்கீட்டில் எவ்வகையான கொடுக்கல் வாங்கல்கள் பதிவுற்குட்படுத்தப்படும்

b. வணிகத்திற்கும் ஏனைய தரப்பினருக்குமிடையே இடம் பெறும் வாழப்பரிமாற்றம் எவ்வாறு அழைக்கப்படும்

*(03)* சில்லறை வணிகமொன்றில் சில தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளது

கடன்பட்டோர்,
கடன்கொடுதஹோர்
வங்கிக்கடன்
மூலதனம்,
பற்று
கொடுத்த கழிவு
பெற்றகழிவு,
இயந்திரம்
காசுமீதி
மோட்டார்வாகனம்
சம்பளம்
வட்டி வருமானம்

மேலே தரப்பட்டவற்றின் சொத்துக்கள். பொறுப்புக்கள், உரிமை, வருமானம், செலவீனம் என்பவற்றின் வேறுபடுத்தி இனங்காண்க

*(04)* கணக்கீட்டின் கூறுகள் நான்கினையும் குறிப்பிடுக



kalvi.lk

May

ONLINE CLASSES - 2025

# NEW ADMISSIONS

## 2ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் O/L வரை**

**அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ் ...**



இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் ZOOM APP மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.



**JOIN NOW**

WWW.KALVI.LK

**075 287 1457**